20. (அ) பதிப்பாசிரியரின் பணிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலி மாசு குறித்து விளக்குக.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) மரங்கள் குறித்து மு.மேத்தா குறிப்பிடும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அமுதவல்லியின் குணநலன்களை விவரி.

22. (அ) கேதாரியின் தாயார் சிறுகதை உணர்த்தும் சமூக அவலத்தை விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஜெயகாந்தனின் புதின உத்திகளை விவரிக்க.

23. (அ) மாசுபடுதலின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலையங்கம் குறித்த கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

---



# 1051/T11/UTAM01 NOVEMBER 2016

## இக்கால இலக்கியம்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. ஆசியஜோதி யாருடைய சரித்திரத்தைக் கூறுகிறது?

2. உயிர்களின் கருப்பை என அப்துல்ரகுமான் குறிப்பிடுவது யாது?

3. அமுதவல்லிக்குத் தமிழ்க்கவிதை புனைய கற்பிக்க நியமிக்கப்பட்டவன் யார்?

4. புரட்சிக்கவி வடமொழியிலுள்ள எந்நூலின் தழுவல்?

5. கணையாழி என்பது எதனைக் குறிக்கும்?

6. கேதாரியின் தாய்பெயர் என்ன?

7. விடுதித் தலைவியின் பெயர் யாது?

8. மீனா யாருடைய சகோதரி?

9. ஜெர்னலிசம் என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழாக்கம் எது?

10. செய்திக் களங்களின் இரு பிரிவுகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 3 = 15$ மதிப்பெண்கள்)

ஒரு பத்தி அளவில் விடை தருக.

11. (அ) ஆயுள் தண்டனை எனும் தலைப்பிலான கவிதையில் அப்துல்ரகுமான் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) அரளிப்பூ எதற்காக அழுகிறது என மு. மேத்தா குறிப்பிடுகிறார்?

12. (அ) அமுதவல்லி பாடம் கற்பதற்கு ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் யாவை?

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் பற்றிக் குறிப்பு வரைக.

13. (அ) கணையாழியின் கனவு சிறுகதையின் தொடக்கம் யாது?

(அல்லது)

(ஆ) கேசவன் தன் மகனைக் கோபித்தது ஏன்?

14. (அ) மீனாவின் இயல்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பட்டண்ணா பாத்திரப் படைப்பை விளக்குக.



15. (அ) இதழியல் விதிகள் யாவை?

(அல்லது)

(ஆ) காற்று எவ்வெவ்வாறு மாசுபடுகிறது?

பகுதி இ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

<u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

16. (அ) பராசக்தியிடம் பாரதி வேண்டுவன யாவை?

(அல்லது)

(ஆ) மரணம் குறித்து அப்துல் ரகுமான் பாடுவன யாவை?

17. (அ) பாரதிதாசன் நிலவை எங்ஙனம் வருணிக்கின்றார்?

(அல்லது)

(ஆ) ஏழைச் சிறுவனுக்கும் புத்தர் கூறிய அறிவுரைகளை எழுதுக.

18. (அ) கல்கத்தா ரங்கநாதத்தின் பண்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) விருந்தாசலத்தின் பண்புநலன்களை எழுதுக.

19. (அ) பங்கஜவல்லியம்மாள் பாத்திரப்படைப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) ராமதாஸ் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக.

20. (அ) வேலூர்ச் சிப்பாய்க் கலகம் – விளக்குக.

(அல்லது)

(ஆ) போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக்காரர் – விளக்குக.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) தமிழகத்தின் இயற்கை அமைப்பினைக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பல்லவப் பேரரசர்கள் பற்றிக் கட்டுரை வரைக.

22. (அ) முதலாம் இராசராசன், இராசேந்திரன் பற்றி மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சோழர் காலச் சமுதாய நிலையினை மதிப்பிடுக.

23. (அ) நாயக்கர் காலச் சமுதாய நிலையினை ஆய்க.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டுத் தமிழகம் பற்றி ஆய்க.

———————



# 1052/T12/UTAM02 NOVEMBER 2016

## தமிழக வரலாறும் பண்பாடும்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் விடை தருக.

1. குடுமியாமலைக் கல்வெட்டில் காணப்படும் கட்டுரைச் செய்தி எதனைப் பற்றியது?

2. முல்லையும் குறிஞ்சியும் வறண்டு போனால் அவை பெறும் பெயர் யாது?

3. புத்ததத்தர் எழுதிய நூல் எது?

4. சிம்மவிட்னு அவையில் வீற்றிருந்த வடமொழிப் புலவர்கள் யார்?

5. கல்வெட்டுகளில் வரலாற்று நிகழ்ச்சிகளை நிரல்படப் பொறிக்கும் வழக்கத்தை உருவாக்கியவர் ————

6. சமுதாயத்தில் வளம் படைத்தவர்கள் ———— பிரிவில் இடம் பெற்றிருந்தனர்.

7. கங்காதேவி எழுதிய நூல் எது?

8. விசயநகரப் பேரரசை நிறுவியவர் யார்?

9. டச்சுக்காரர்கள் தமது வணிகக் களமாக அமைத்துக் கொண்ட பகுதி எது?

10. கட்டபொம்மன் எங்கு தூக்கிலிடப்பட்டான்?

பகுதி ஆ — ($5 \times 3 = 15$ மதிப்பெண்கள்)

பத்தி அளவில் விடை தருக.

11. (அ) பெருங்கற் புதைகுழிகளின் அமைப்பு யாது?

(அல்லது)

(ஆ) களவும் கற்பும் – குறிப்பு வரைக.

12. (அ) இருண்ட காலம் – பெயர்க் காரணம் தருக.

(அல்லது)

(ஆ) மகேந்திர வர்மன் அமைத்த கோவில்கள் யாவை?

13. (அ) திருப்புறம்பயப் போரின் விளைவுகள் யாவை?

(அல்லது)

(ஆ) சோழராட்சியின் வலங்கைப் பிரிவு பற்றிக் கூறுக.

14. (அ) பிரித்தாளும் சூழ்ச்சி என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) குடவோலை முறையை விவரி.



15. (அ) விசுவநாத நாயக்க மன்னன் – குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) பாளையப்பட்டு ஆட்சி முறை என்றால் என்ன?

பகுதி இ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) தமிழக வரலாற்றை அறிய உதவும் செப்பேடுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்க கால மகளிர் நிலையைச் சுட்டி காட்டுக.

17. (அ) பல்லவர்கள் யார்? விவரி.

(அல்லது)

(ஆ) நரசிம்மப் பல்லவனின் கலைத் தொண்டினை விவரி.

18. (அ) சோழப் பேரரசின் தோற்றம் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சோழர் கால நிர்வாக அமைப்புகள் பற்றிக் கூறுக.

19. (அ) மாலிக்காபூர் படையெடுப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் காலத்தில் திருமலை நாயக்க மன்னர் பெறும் இடத்தினை விவரி.

20. (அ) தமிழ் மொழியின் குலங்களாகக் கூறப்படுவன யாவை?

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கியம் கூறும் நாட்டு வளத்தினை எடுத்துரைக்க.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்திச் சிறப்பைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குலசேகரர் வித்துவக் கோட்டு அம்மானை வேண்டி நிற்றல் பற்றி விவரி.

22. (அ) சுரமஞ்சரியை மணக்க சீவகன் கொண்ட யுத்தியை விவரி.

(அல்லது)

(ஆ) கும்பகர்ணன் போர் செய்த திறம் பற்றி எடுத்தியம்புக.

23. (அ) எறிபத்த நாயனார் தம் உயிரை மாய்க்க நேர்ந்த நிகழ்வை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியின் சிறப்புகளை 'தூது' வழி மதிப்பிடுக.

---



# 1053/T21/UTAM03 NOVEMBER 2016

## இடைக்கால இலக்கியம்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

ஓரிரு சொற்களில் விடை தருக.

1. தம்பிரான் தோழன் என அழைக்கப்பட்டவர் யார்?
2. ஆழ்வார் பாடிய பாசுரங்களின் தொகுப்பு எது?
3. சீவகன் எத்தனை பெண்களை மணக்கிறான்?
4. இராவணன் யாரைக் கொண்டு கும்பகர்ணனைத் துயிலெழுப்பினான்?
5. எறிபத்த நாயனார் ஏந்தியிருந்த படைக்கலம் யாது?
6. வீரமாமுனிவரின் இயற்பெயர் யாது?
7. உமறுப்புலவர் யாரிடம் தமிழ் கற்றார்?
8. கலம்பகம் எத்தனை உறுப்புகளைக் கொண்டது?
9. தமிழ் எக்கடவுளிடம் தூது செல்கிறது?
10. பள்ளு இலக்கியத்தில் முதல் நூல் எது?

## பகுதி ஆ — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

பத்தி அளவில் விடை தருக.

11. (அ) சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர் யார்?

(அல்லது)

(ஆ) குலசேகரர் – குறிப்பு வரைக.

12. (அ) சீவகனின் புதுமைக்கோலம் யாது?

(அல்லது)

(ஆ) கும்பகர்ண வதைப் படலம் என்பது யாது?

13. (அ) எறிபத்த நாயனாரின் சிறப்பு என்ன?

(அல்லது)

(ஆ) தேம்பாவணி – பொருள் தருக.

14. (அ) சீறாப்புராணம் – குறிப்புரைக்க.

(அல்லது)

(ஆ) தோழி, கார் வரவு கண்டு தலைவியை ஆற்றுவித்தது யாது?

15. (அ) 'தூது' என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) பள்ளியர் வரவு குறித்து எழுதுக.



## பகுதி இ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) சுந்தரர் கூறிய சிவபெருமானின் அருட் தன்மையை 'திருநொடித்தான்மலை' வழி எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமாலின் பெருமையை "மாவினை வாய்பிளந்து" எனத் தொடங்கும் பாசுரம் வழி எழுதுக.

17. (அ) பார்ப்பனக் கீதம் கேட்ட சுரமஞ்சரி அடைந்த நிலை யாது?

(அல்லது)

(ஆ) இராமனிடம், கும்பகர்ணனைப் பற்றி விபீடணன் கூறியது யாது?

18. (அ) 'சிவதா' என, சிவகாமி ஆண்டார் வேண்டியது எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) தாவீதனின் வீரச் சிறப்பைக் குறிப்பிடுக.

19. (அ) உழவர்களின் நிலையை சீறாப்புராணங் கொண்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) நந்திக் கலம்பகம் கூறும் வெற்றி முரசச் சிறப்பு யாது?

20. (அ) இடைச்சொல்லின் இலக்கணம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்கள் யாவை?

பகுதி ஈ — ($3 \times 15 = 45$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

21. (அ) முப்பத்திரண்டு உத்திகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பிணப்புக்கள் பற்றிய கருத்துக்களை எடுத்துரைக்க.

22. (அ) ஆகுபெயர் எத்தனை வகைப்படும்? அவற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

23. (அ) பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவற்றைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'உரியியல்' இடம் பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

———



# 1054/T22/UTAM04 NOVEMBER 2016

## இலக்கணம் – எழுத்தும் சொல்லும்

(For those who joined in July 2010 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — ($10 \times 1 = 10$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாயிரம் என்பதன் விளக்கம் யாது?
2. மகரக்குறுக்கம் என்றால் என்ன?
3. பெயர்ப் பகுபதம் விளக்கம் யாது? சான்று தருக.
4. த.ந. எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கும்.
5. உடம்படு மெய் என்றால் என்ன?
6. வடச்சொல் என்பதன் விளக்கம் யாது?
7. நிகழ்கால இடைநிலைகள் யாவை?
8. முற்றெச்சம் என்றால் என்ன?
9. வேற்றுமை உருபு எத்தனை? அவை யாவை?
10. உயிர்ப்பொருள் என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

ஒரு பத்தி அளவில் விடை தருக

11. (அ) அழகு எத்தனை வகைப்படும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒற்றளபெடை என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

12. (அ) பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

(அல்லது)

(ஆ) எண் வகையான விடைகள் யாவை? விளக்குக.

13. (அ) உகர, ஐகார ஈற்றுப் புணர்ச்சிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தகுதி வழக்கு எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.

14. (அ) பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும். விளக்குக.

(அல்லது)

(ஆ) உயர்திணை ஆண்பால் பெயர்கள் யாவை?

15. (அ) இடைச்சொல்லின் இலக்கணம் கூறி சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்பதை விளக்கிக் கூறுக.



பகுதி இ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) மாணாக்கரின் இலக்கணத்தைக் கூறி அவர்களுக்கு உவமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றியலுகரம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

17. (அ) வினைப் பகுப்பதம் என்பதைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அகர ஈற்று புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.

18. (அ) செய்யுள் விகாரம் எத்தனை வகைப்படும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிக்கு இறுதியில் வருத்துக்கள் எவை? விளக்குக.

19. (அ) அறுவகையான வினாக்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வேற்றுமைப் புணர்ச்சி குறித்து விளக்குக.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) கிறித்துவர்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியக் கொள்கைகளை எடுத்துரைக்க.

22. (அ) வாய்மொழி இலக்கியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இலக்கியத்தின் வடிவ வளர்ச்சியினை எடுத்தியம்புக.

23. (அ) தமிழ்த் திறனாய்வின் வளர்ச்சி நிலைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சமய இலக்கியங்கள் பற்றி விவரிக்க.

———————



# 1055/T31/UTAM05 NOVEMBER 2016

## தமிழ் இலக்கிய வரலாறும் திறனாய்வும்

(For those who joined in July 2010 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. தமிழோடு கலந்து விட்ட வடமொழிச் சொற்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. கடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களைக் கூறுக.

3. சங்க இலக்கியத்தில் அகமும், புறமும் கலந்த நூல் எது?

4. களப்பிரர் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

5. குடிமக்கள் காப்பியமாகக் கருதப்படுவது எது?

6. முதல் மூன்று திருமுறைகளை அருளியவர் யார்?

7. குண்டலகேசி என்பதன் பொருள் யாது?

8. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் யார்?

9. கண்ணதாசன் இயற்றிய இருநூல்களைக் குறிப்பிடுக.

10. பெண் நாவலாசிரியர்கள் இருவரைக் கூறுக.

## பகுதி ஆ — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் ஒரு பத்தி அளவில் விடை தருக.

11. (அ) இலக்கியத்தின் உறுப்புக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) இலக்கிய உத்திகள் பற்றி எழுதுக.

12. (அ) இலக்கியத்தில் சூழல்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கியமும், சமுதாயமும் பற்றி எழுதுக.

13. (அ) நாடக இலக்கணத்தை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) மூவகைக் கற்பனைகள் குறித்து எழுதுக.

14. (அ) ஐஞ்சிறுகாப்பியங்கள் பற்றி குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நிகண்டுகள் பற்றி எழுதுக.

15. (அ) சிற்றிலக்கியங்களில் கலம்பகம் பெறும் இடம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரதியார் பற்றி குறிப்பு வரைக.



## பகுதி இ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) தொல்காப்பியத்தின் இயல் அமைப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

17. (அ) சங்கப் புலவர்களின் மாண்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) களவழி நாற்பதின் செய்திகளைக் குறிப்பிடுக.

18. (அ) திருமந்திரம் - பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) கம்பர் பற்றி குறிப்பு வரைக.

19. (அ) திறனாய்வின் வளர்ச்சி நிலையினை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) திறனாய்வும் உளவியலும் பற்றி எழுதுக.

20. (அ) தமிழ்ப் புதுக்கவிதையின் முன்னோடிகளைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) கவிதை வளர்ச்சியில் பத்திரிக்கைகளின் பங்களிப்பினை எழுதுக.

(6 pages)

# 1056/T32/UTAM06 NOVEMBER 2016

## பண்டைய இலக்கியம்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

ஒரு தொடரில் விடை தருக.

1. ஐங்குறுநூற்றின் 'வேட்கைப் பத்து' அமைந்துள்ள திணை யாது?

2. கையுங் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை - யாருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?

3. அகநானூற்றின் வேறுபெயர் யாது?

4. நற்றிணையின் அடிவரையறை எத்தனை?

5. இயமன் தன் உடலைப் பிரித்துச் செவ்வேளுக்குக் கொடுத்தது என்ன?

6. சேர மன்னர்களை மட்டும் பாடிய எட்டுத்தொகை நூல் எது?

7. பட்டினப்பாலை காட்டும் மகளிர் கோழிகளை எவ்வாறு விரட்டினர்?

8. 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்பது எதற்கு உவமையாகக் கூறப்படுகிறது?

9. 'குல விச்சை கல்லாமல் பாகம் படும்' - பொருள் யாது?

10. 'தெய்வ மால்வரைத் திருமுனி' என்று சிலம்பு யாரைக் குறிப்பிடுகிறது?

பகுதி ஆ — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

ஒரு பத்தி அளவில் விடை தருக.

11. (அ) 'பிரிவில்' என்ற தலைமகற்குத் தோழி 'பிரியாதொழியப் பெறின் நன்று' எனக் கூறும் செலவு அழுங்குவித்த பத்துப்பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவன், தலைவியை எவ்வாறு நலம் பாராட்டுகிறான் என்பதனைக் குறுந்தொகைப் பாடல் மூலம் விளக்குக.

12. (அ) 'பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது' எனும் கபிலரின் நற்றிணைப் பாடலை எழுதுக.

(அல்லது)

(ஆ) இடைச்சுரத்து கண்டார் கூற்றினை, பெரும்பதுமனாரின் நற்றிணைப் பாடல் வழிப் புலப்படுத்துக.

13. (அ) பட்டினப்பாலை குறிப்பிடும் ஆவணத்தையும் அங்கு வெறியாடல் நிகழ்வதையும் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) காவிரிப் பூம்பட்டினத்தில் வாழும் வணிகரின் குடிவாழ்க்கையை எழுதுக.

14. (அ) 'இனியவை கூறல்' - அதிகாரத்தில் வள்ளுவர் தரும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'செய்ந்நன்றியறிதல்' உணர்த்தும் குறட்பாக்களை எழுதுக.

15. (அ) ஒழுக்கத்தின் மேன்மையைப் பழமொழி ஒன்றின் மூலம் சுட்டுக.

(அல்லது)

(ஆ) கோவலனை எவ்வாறு இளங்கோவடிகள் அறிமுகப்படுத்துகிறார் என்பதனைக் குறிப்பிடுக.

பகுதி இ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) உள்ளுறையின் சிறப்பினை ஐங்குநூற்றுப் பாடலின் வழிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தலைவனின் இல்லம் சென்று மீண்டு வந்த செவிலியின் கூற்றுக்களை ஐங்குறுநூறு வழி எடுத்தியம்புக.



17. (அ) 'கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள்' எனக் கேட்ட காதற்பரத்தை உரைத்தவற்றையும், தலைமகனுக்குத் தோழி வாயில் மறுத்ததையும் கயமனாரின் குறுந்தொகைப் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'தலைவன் நெஞ்சுக்குச் சொல்லி செலவு அழுங்கியது' குறித்து அகநானூற்றுப் பாடல் வழிச் சுட்டுக.

18. (அ) 'தலைவன் செலவுக் குறிப்பு அறிந்து வேறுபட்ட தலைவிக்குத் தோழி கூறியதாக' அமைந்த பெருங்குன்றூர்க் கிழாரின் நற்றிணைப் பாடலை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது' என்னும் அம்மூவனார் நற்றிணைப் பாடலை விளக்குக.

19. (அ) 'அடக்கமுடைமை'யை குறள் வழி எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) 'பிறனில் விழையாமை' குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக.

20. (அ) சிலப்பதிகாரம் காட்டும் அரங்க அமைப்பினை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) அரங்கேற்று காதை குறிப்பிடும் மாதவியின் ஆடலை விவரி.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) இந்திர விழா ஊரெடுத்த காதை குறிப்பிடும் அன்றைய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புக்களைத் தொகுத்தளிக்க.

(அல்லது)

(ஆ) பழமொழி நானூறு காட்டும் வாழ்வியல் அறங்களை விவரி.

22. (அ) ‘பயனில சொல்லாமை’ அதிகாரத்தில் இடம்பெறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சோழ நாட்டின் வளத்தினைப் பட்டினப்பாலை வழி எடுத்துக்காட்டி விளக்குக.



23. (அ) பரிபாடல் கூறும் செவ்வேளின் சிறப்புக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) ‘வேட்கைப்பத்து’ புலப்படுத்தும் அவினி மன்னனின் சிறப்புக்களை விவரி.

———————

20. (அ) பாடாண்திணையில் இடம் பெற்றுள்ள செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நிரனிறையணியின் இலக்கணம் கூறி அதன் வகைகளை குறிப்பிடுக.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)
கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) நம்பியகப் பொருள் கூறும் அகப்பாட்டுறுப்புகள் பற்றிய தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வெட்சித்திணை, கரந்தைத்திணை பற்றிய கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

22. (அ) பொதுவியல் திணையின் துளைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பொருள்கோள் எத்தனை? அவற்றைச் சான்றுடன் விளக்குக.

23. (அ) சிலேடையணியின் வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) வேற்றுப்பொருள் வைப்பணியின் இலக்கணத்தைச் சான்றுடன் விவரிக்க.

---



# 1057/T33/UTAM07 NOVEMBER 2016

## இலக்கணம் பொருளும் யாப்பும் அணியும்

(For those who joined in July 2010 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)
அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. ஆநிரை கவர்வலர் சூடுதற்குரிய மலர் ————————.

2. "இந்திரன்" எந்த நிலத்திற்குரிய தெய்வம் ————————.

3. செய்யுளுக்கு அழுகுப்படுத்துவது ————————.

சரியான விடையைத் தேர்வு செய்க :

4. அணியிலக்கணம் நூலின் பெயர் என்ன?
   (அ) நம்பியகப்பொருள் (ஆ) தண்டியலங்காரம்
   (இ) நன்னூல் (ஈ) தொல்காப்பியம்

5. பலபாட்டு ஒரு வினை கொள்ளும் எது?
   (அ) முத்தகம் (ஆ) குளகம்
   (இ) வைதருப்பம் (ஈ) கௌடம்

6. பாலை நிலத்திற்குரிய உரிப்பொருள் எது?
   (அ) பிரிதல் (ஆ) இரங்கல்
   (இ) இருத்தல் (ஈ) புணர்தல்

7. காஞ்சித்திணை புறத்திணை எது?

(அ) குறிஞ்சித்திணை (ஆ) நெய்தல்திணை

(இ) பொதுவியத்தினை (ஈ) பெருந்திணை

ஒரு சொல்/தொடரில் விடை தருக :

8. மகட்பாற் காஞ்சியின் இலக்கணம் யாது?

9. அமிதசாகரர் எச்சமயம் சார்ந்தவர்?

10. பாவிக அணி என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

ஒரு பத்தி அளவில் விடை தருக.

11. (அ) வாகைக் காஞ்சி, பூவை நிலை என்பதன் விளக்கம் யாது?

(அல்லது)

(ஆ) "எருமை மறம், ஏம எருமை" – விளக்குக.

12. (அ) மோனைத் தொடையின் இலக்கணம் யாது. அதன் வகைகளை குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் பொது இலக்கணம் யாது? விளக்குக.

13. (அ) அதிசய அணியின் இலக்கணம் கூறி சான்று தருக.

(அல்லது)

(ஆ) முன்னவிலக்கு அணியின் இலக்கணம் யாது? சான்று தருக.



14. (அ) முல்லைத்திணைக்குரிய முதல் உரிப்பொருள்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) நெய்தற்திணைக்குரிய கருப்பொருள் யாவை?

15. (அ) உடன்போக்கு – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பகைவாயின் பிரிவு – குறிப்பு வரைக.

பகுதி இ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) காஞ்சித்திணையின் துறைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) "இரவுக்குறி இடையீடு" பற்றி விளக்குக.

17. (அ) அசை, அடி –இவற்றின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கௌடநெறியை விளக்குக.

18. (அ) வஞ்சிப்பாவின் இனங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வாயுரை வாழ்த்து புறநிலை வாழ்த்து விளக்குக.

19. (அ) சீர்கள் எத்தனை? அவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) செய்யுள் விகாரம் எத்தனை வகைப்படும்? விளக்குக.

20. (அ) வானொலி நாடகத்தின் இலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) இன்றைய தொலைக்காட்சி நாடகங்களின் அமைப்பினையும் எழுதுக.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

21. (அ) நகைச்சுவை வளர்ந்த கதையினைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நொண்டி நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி, பயன் குறித்துத் தொகுத்துரைக்க.

22. (அ) இக்கால நாடகங்களின் போக்கினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் ஆற்றிய நாடகக் கலைத் தொண்டினைப் புலப்படுத்துக.

23. (அ) தொல்காப்பியர் சுட்டும் நாடக வழக்குகள் மெய்ப்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பிற்கால சமய நாடகங்களின் அமைப்பினையும் சிறப்பினையும் தொகுத்தெழுதுக.

———————



# 1058/T3A/UTAM08 NOVEMBER 2016

## நாடகவியல்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

ஓரிரு சொற்களில் விடையளி.

1. கோவிலில் கூத்தாடும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?

2. நாடக இலக்கணத்தைக் கூறும் இரண்டு நூல்களைக் கூறுக.

3. அமலைக் கூத்து என்றால் என்ன?

4. இராம நாடகத்தின் ஆசிரியர் யார்?

5. கே. பாலசந்தரின் இரு நாடகங்களைக் கூறுக.

6. நாடகவியல் என்ற நூலின் ஆசிரியர் யார்?

7. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியால் இயற்றப்பட்ட வரலாற்று நாடகம் எது?

8. மனோகரா குழுவினர் நடத்திய நாடகம் ஒன்றினைக் கூறுக.

9. கம்பராமாயணத் திறனாய்வுக்கு அண்ணா தந்த நாடக வடிவ நூல் எது?

10. வானொலி நாடகம் ஒன்றினைக் கூறுக.

பகுதி ஆ — (5 × 3 = 15 மதிப்பெண்கள்)

ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்.

11. (அ) பண்டைக் காலத்தில் நடிகர்கள் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டனர்.

(அல்லது)

(ஆ) திரைகளின் வகைகள் பற்றி விளக்குக.

12. (அ) ஆடலும் பாடலும் சேர்ந்தது நாடகம் – விளக்குக.

(அல்லது)

(ஆ) இசை திறமையாலேயே தனிப்பெரும் புகழ் பெற்ற ஐவரைக் கூறுக.

13. (அ) கலைமகள் ஆடிய கூத்தினை சுட்டுக.

(அல்லது)

(ஆ) சிற்பக்கலைக்கும் ஓவியக் கலைக்கும் சான்று தருக.

14. (அ) நடிகனின் தோற்றம் எவ்வாறு இருக்க வேண்டும்?

(அல்லது)

(ஆ) நொண்டி பாத்திரத்தின் முக்கியத்தினை நொண்டி நாடகம் கொண்டு விளக்குக.

15. (அ) வானொலி நாடகத்தின் தொடக்கம் எவ்வாறு இருக்க வேண்டும்.

(அல்லது)

(ஆ) நாடகத்தினை மொழிபெயர்க்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய மூவகை நடைமுறைகள் யாவை?



பகுதி இ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

ஒரு பக்களவில் விடை தருக.

16. (அ) நாடகம் என்றால் என்ன? சொற்பொருள் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) மனோண்மணியம் நாடகத்தில் தனிமொழி பேசியவர் யார்? விளக்குக.

17. (அ) மாதவி ஆடிய பதினொரு வகையான ஆடல் பெயரினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தமிழ்நாட்டில் நகைச் சுவையில் புதுமையைப் புகுத்தியவர் யார்?

18. (அ) மீனாட்சியம்மை குறத்தின் நாடக அமைப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) நாடக உபாத்தியாயர்கள் குறித்து விளக்குக.

19. (அ) திரு.தி.கே. சண்முகம் பணி புரிந்த உதவிகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஆரியசபா நாடகத்தின் சிறப்பினைப் புலப்படுத்துக.